
உ

சிவமயம்



கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும்
சுருவிலை வதிவிடமாகவும்
குளியாப்பிட்டியைத் தொழிலிடமாகவும் ஏற்று
கனடாவில் வாழ்ந்து
அமரத்துவம் அடைந்த

# உயர்திரு. சின்னத்தம்பி தியாகராஜா

அவர்களின்

# நினைவு மலர்

08-12-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# உயர்திரு. சின்னத்தம்பி தியாகராஜா

அவர்கள்



தூல முகிழ்ப்பு
26-06-1935

தூல அவிழ்ப்பு
25-10-1997

திதி நிர்ணயம்

ஆண்டு ஈஸ்வரத் தமிழ் ஐப்பசி ஒன்பதில்
பூண்ட அபர பக்கத்தசமியில் - நீண்ட புகழ்
சின்னத்தம்பி தியாகராசா எம்மை விட்டு
அத்தன் அடிசேர்ந்தான் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம்பொன் சின்னத்தம்பி தியாகராஜா அவர்களின் வாழ்க்கை வளம்

திருவாரூர் தியாகேசர் அந்த ஆன்மாவுக்கு மனிதப் பிறவியை வழங்கினார். அது பூமியை நோக்கிப் புறப்பட்டது. கைதரவல்ல கடவுள் கரம்பொன்னில் நின்று கைகொடுத்தார். பல அறிஞர்களையும் அரசியல் தலைவர்களையும் வணக்கத்திற்குரிய கிறிஸ்தவ மதகுரு மாரையும், விவசாயப் பெருங்குடி மக்களையும், வர்த்தகத் துறைப் பிரமுகர்களையும் தாங்கி நின்ற கரம்பொனூரிலே உழுதுண்டு வாழ்ந்த உயர்குடியிலே திரு. சின்னத்தம்பி திருமதி விசாலாட்சி தம்பதியருக்கு மகனாக அந்த ஆன்மா மண்ணில் நல்லவண்ணம் வாழப் பிறப்பெடுத்தது.

திருவருள் எந்தத் திருநாமத்தோடு நின்று அருள் பாலித்ததோ அந்தத் திருநாமமே பிறப்பெடுத்த மனிதர் களுக்கு வந்து அமையும். தமக்குப் பிறந்த மகனுக்கு தியாகராஜா என்று பெயர் சூட்டினர் பெற்றோர்.

26-6-1935ம் ஆண்டு பிறந்த தியாகராஜா அவர்கள் தனது இளமைப்பருவத்தில் கல்வி கற்று கேள்விகளில் தெளிந்து அறிவுடைமையால் விளக்கம் பெற்றார். பொருள் இல்லாதாருக்கு இந்த உலகம் இல்லை என்ற திருவள்ளு வரின் தேற்றத்தில் ஊறியவர். திசைதொறும் சென்றும் திரைகடல் ஓடியும் திரவியம் திரட்டலானார். குளியாப்பிட்டி இவருடைய வர்த்தக வாழ்வுக்கு வழிகாட்டியது. 'ராஜாஸ் ஸ்ரோர்" முதலாளியானதும் தியாகராஜா அவர்கள் தியாகர் ஆனார். குளியாப்பிட்டியில் வாழ்ந்த சிங்கள மக்கள் இவருடைய அன்புக்கும் கண்ணியத்துக்கும் பாத்திர மானார்கள்.

அன்பாலும் பண்பாலும் அனைவர் மனத்திலும் தியாகர் ஒரு புண்ணிய சீலராய் புகுந்தார். ஊழ்வினை உருட்டி விட்ட இனக்கலவரங்களில் கூட குளியாப்பிட்டி மக்களின் அன்புக்கவசம் இவரைக் காப்பாற்றியது. தியாகையர் எதற்கும் திகைக்காதவராய் திண்மையோடு திருநின்ற செல்வராய் குளியாப்பிட்டியில் நீண்டகாலம் வாழ்ந்தவர்.

தியாகரோடு கூடப்பிறந்த உருத்துடையோர் நால்வர். இவர்கள் முறையே புஸ்பமணி, ஏகாம்பரநாதன், சரோஜினிதேவி, சகுந்தலாதேவி ஆகிய இவர்கள் முறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றம்பலம், இரத்தினேஸ்வரி, குருநாதன், நடராஜா ஆகியோரைத் திருமணம் செய்து வாழ்வாராயினர்.

தியாகராஜா அவர்கள் இல்லறம் என்னும் நல்லறத்தில் இனிதாய் இருந்து மகிழ்ந்த பேறுபெற்றவர். சுருவிலூரில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த திரு. பொன்னையா திருமதி சிவயோகம் ஆகியோரின் அருமை மகளான அம்பிகாவதியை திருமணம் செய்து கொண்ட தியாகர் ஆறு குழந்தைச் செல்வங்களைப் பிள்ளைகளாகப் பெற்றார். தந்தை மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருந்த தியாகர் தம்பதியர் அவர்களில் பெண்பிள்ளைகளை வேம்படி மகளிர் கல்லூரியிலும் ஆண்மக்களை வேலணை மத்திய மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் சேர்த்து கல்விச் செல்வத்திற்கு வழிகாட்டினார்.

இவருடைய பிள்ளைகள் சாந்தினி, குமுதினி, ரவிதரன், சுகிர்தினி, உமாதினி, குகாதரன் ஆகியோராவர். இவர்கள் முறையே தர்மகுமார், ஞானசேகரம், பத்மநீலா, முரளிதரன், திவ்வியகுமார் ஆகியோரைத்திருமணம் செய்து நல்வாழ்வு வாழ்கின்றார்கள்.

தியாகரின் துணைவியார் அம்பிகாவதியின் சகோதரர்கள் (தவமணி) சாரதாம்பாள், கமலாம்பிகை, கணேஷன் ஆகியோராவர். இவர்கள் முறையே சுப்பையா, ஆனந்தசிவம் மகாலஷ்மி ஆகியோரைத் திருமணம் செய்துள்ளனர். பெயர் சொல்லவந்த பேரப்பிள்ளைகளாக தியாகர் தம்பதியினருக்கு ஈஷானா, அனுஷ்ஷானா, தர்ஷானா, நிஷாந், பிரியங்கா முதலியோர் உள்ளனர்.

தியாகர் தம்பதியர் தமது பண்பாலும் பயன்மிகுந்த பழக்கங்களாலும் மரியாதைக்குரிய குடும்பமாகக் கணிக்கப்பட்டவர்கள். உறவினர் நண்பர்களின் திருமணம் பூப்புனித நீராட்டு முதலிய நிகழ்ச்சிகளில் கலந்து சபைகளைச் சிறப்பித்தவர்கள்.

தியாகர் அவர்களின் மரணம் எல்லோர் மனத்தையும் பிசைந்து உருக்கிவிட்டது. அவருடைய பிள்ளைகள் தந்தை என்ற தலைவனை இழந்து துக்கத்தால் துடிதுடித்துப் போயினர். தந்தையை ஒரு ஆற்றலாய் ஆக்கமாய் ஊக்கமாய் மதித்துப் பேணிப் போற்றிய பிள்ளைகளுக்கு அவருடைய இழப்பு தாங்கொணாத் துயரைக் கொடுத்துவிட்டது. வேரறுந்த மரமாய், நீரிழந்த மீனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிழந்த அவர்களின் அவலம் எல்லோரையும் கசிய வைத்துவிட்டது. என் செய்வோம்?

விதியே! விதியே! என்ன செய்ய நினைத்தாய் என்று விதியை தான் நாம் நோக முடியும். நேற்று இருந்தவர் இன்று இல்லாமல் போவது தான் வாழ்க்கை நியதி. இதனை எண்ணி எல்லோரும் மன ஆறுதல் அடைவோம்.

தியாகர் அவர்களின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

-திருக்குறள்

கு. சிவானந்தசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி மனம்

என் மனம் கவர்ந்த மணாளன். என் மனை சிறக்கப் பிறந்த சீராளன். கைப்பிடித்த நாள் முதலாகக் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டில் தடம்புரளாத தயாளனாய் விளங்கிய தியாகேசர் என்நெஞ்சை நீராக்கி விட்டுக் காலத்தோடு கரைந்து விட்டார்.

பிள்ளைகளைப் பேணி வளர்த்து ஏணியாய் இருந்து ஏற்றி வைத்த குலசீலனே! எங்கே போனீர்கள்? ஐயா! பொட்டோடு நான் போகப் போட்டிருந்த திட்டத்தை எட்டியுதைத்ததேனையா? என்ன பிழை செய்தேன் நான்? நடையால் உரையால் உணர்வுகளால் உழைப்பால் எங்களை மகிழ்வித்த மாதவனே! இனி உங்கள் ஆளுமைகளை எங்கே காணப் போகிறேன்? ஏங்கி ஏங்கித் தேங்கி நிற்கும் எங்கள் இயலாமையை யாரிடத்தில் சொல்லி ஆறுவோம். பார்க்கும் இடமெல்லாம் உங்கள் காட்சிகளாய் கேட்கும் ஒலியெல்லாம் உங்கள் ஓசைகளாய் தெரிகின்றனவே!

நீங்கள் இல்லாத இந்த நேரத்தில் உங்கள் அருமையும் பெருமைகளும் இரட்டிப்பாய் எங்களுக்குள் எழுந்து இடித்து வருத்துகிறதே! அப்பா என்போரும்! ஐயா என்போரும் தாத்தா என்போருமாய் என்புருகி நிற்கிறோமே!

என்தலைவா! ஒன்று செய்வாயா? நான் வந்து உன்னோடு நாயகியாய் இருப்பதற்கு நீ இருக்கும் இடத்திலொரு நிலம் பார்த்து வையுமையா! அதுவரை நான் உங்கள் நினைவோடு உலவுகிறேன்.

மனைவி

✝ தி. அம்பிகாவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் மக்கள் மனம்

கண்ணை இமை காத்ததுபோல் எங்களைக் காத்து வளர்த்த அப்பா! எண்ணையும் எழுத்தையும் கற்று நாங்கள் முன்னேறக் கல்லூரிகளில் படிக்க வைத்தீர்கள். துன்பம் வராமல் இருப்பதற்கு எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று போதனை செய்தீர்கள்.

வாழ்க்கையில் ஆண்மக்கள் பிரச்சினை, பெண்மக்கள் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை அரசியல் பிரச்சினை எல்லாவற்றையும் விளங்க வைத்தீர்கள். அவையிலே நாங்கள் முன்னணி வகிப்பதற்கு வேண்டிய தகுதிகளை வளர்த்தீர்கள். உங்கள் உழைப்பும் வளர்ப்பும் எங்களைப் புதிய வார்ப்பாய் பொலியச் செய்தன. உங்களுக்குப் பின்பு உங்கள் பொறுப்புக்களை எப்படிச் சுமக்க வேண்டும் என்பதற்கான அறிவுரைகளை அவ்வப்போது கூறினீர்கள்.

இனிமேல் நீங்களே சுமப்பவர்கள் நான் சும்மாயிருப் பேன் என்று பாரங்களை எங்களிடம் கையளித்தீர்கள். இவையெல்லாம் காலன் வரப்போகிறான் என்பதற்குரிய அறிகுறியா? பொல்லாவிதி எங்களை அல்லலுற வைத்து விட்டதே. அப்பா! உங்கள் மறைவு எங்களை வாட்டி வதைக்கிறது. பிறந்தவர் எல்லோரும் ஒரு காலத்தில் இறப்பது என்பது உண்மை தான். ஆனால் வெண்ணையாய் மெழுகுவாத்தியாய் உருகி ஓடும்கண்ணீர் வெள்ளத்தை உருவாக்கும் தன்மையும் இறப்பால் உண்டாவதும் உண்மை தான். அப்பா! உங்கள் போதனைகளை நாங்கள் சாதனையாக்குகிறோம்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி

ஆண்மக்கள்

ஃ தி.ரவிதரன் - தி. குகாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் மக்கள் மனம்

அப்பா என்போமே! ஐயா! என்போமே!
இன்று ஐயோ! அப்பா! என்று அலறித் துடிக்கின்றோம். ஆற்றுவார் ஆற்ற அப்பா அப்பா! என்றே அங்கலாய்த்துத் துடிக்கின்றோம். தேற்றுவார் தேற்ற எங்கள் தெய்வத்தை தந்தையை தேடித் தருவீர்களா என்றே குளறிக் குழம்புகிறோம். நெஞ்சு விம்முகிறது. இதயம் மயங்குகிறது. நிம்மதியின்றி நீராய் உருகுகிறோம். அப்பா என்ற ஆதாரமே எங்கள் நிம்மதியை தரமுடியும். அந்த ஆதாரம் ஆண்டவனின் பாதாரம் தேடிப் பறந்து விட்டது. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் அப்பாவால் ஆக்கப்பட்டது. அப்பாவே எங்கள் ஆதர்ஷ சக்தியாய் அமைந்திருந்தார். அன்புப் பிணைப்பால் அனைவரையும் இணைத்து வாழ்ந்தார். எங்கள் கொடிய விதி அப்பாவை எங்களிடமிருந்து பிரித்து விட்டது. விதியே விதியே என்ன செய்ய நினைத்தாய்?எங்கள் அப்பாவை எங்களுக்குத் தருவாயா?

பாரிமகளிர் போல் பதைத்து நிற்கின்றொம். அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் அப்பா எங்களுடன் இருந்தாரே. இற்றைத் திங்கள் இவ்வெண்நிலவில் அப்பாவைக் காணத்துடிக்கின்றோம். அப்பா அவதாரம் எடுப்பாரா? பிள்ளைகளே என்றுஎங்களைக் கட்டி அணைப்பாரா? ஆண்டவனே எங்கள் ஆசையை தீர்த்து வைப்பாயா?

அப்பா! அப்பா! அப்பா! என்ற எங்கள் குரல் கேட்கிறதா? அப்பா ஓடிவருவீர்களா?
தேடி வருவீர்களா?

பெண்மக்கள்
த.சாந்தினி, ஞா. குமுதினி,
மு. சுகிர்தினி, தி. உமாதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் மனம்

மாமா என்றொரு மாமனிதன். பிதாவாய் பின் நின்று முன்செல்ல வழிகாட்டிய வள்ளல். புத்தி சொல்லி மெத்த மகிழ்ந்திட வைத்த நெகிழ்ந்த நெஞ்சினர். தமிழ் மரபு களைப் பேணி வாழ்ந்திடச் செய்த பெருந்தகை. வேற்றுமை காட்டாத பொன்மனத்தினர்.

எங்கள் மாமா எங்களைத் தன் பிள்ளைகளாகவே கணக்கெடுத்த கனவான். மருமக்கள் என்றால் மற்றுமொரு மக்கட் செல்வங்கள் என்று கூறிய சமத்துவச் சான்றோர். அழகிய சிரிப்பால் அன்பை வளர்த்தவர். அமைதிப் போக்கால் ஆக்கங்களை அறுவடை செய்தவர். தனவானாய் தழைத்து கனவானாய்க் காத்தவர். சபைகளில் நின்று சத்திய சீலம் விளக்கியவர். குறைவற்ற நிறைவாளராய் பொலிந்தவர். தியாகத்தின் திகழ்வோடும் ராஜகம்பீரத்துடனும் வாழ்ந்தவர். இன்றுஎங்கே? எங்களை விட்டு ஏன்தான் காலன் பிரித்தானோ? எந்தப் பிரிவுக்கும் பிளவுக்கும், இணங்காத இங்கித குணத்தவர். காலனின் பிரித்துவிடும் காரியத்திற்கு எப்படிச் சம்மதித்தார் என்பதுவே எங்கள் ஏக்கமாய் உள்ளது.

உழைப்பால் உயர்ந்த உத்தமராகி, ஊருக்கெல்லாம் நல்லவராயும் வல்லவராயும் உலவிய ஜீவன். எங்களைவிடடுப் போய்விட்டாரே. எங்கள் இறைவா! எத்தனை பிறவி எடுத்தாலும் எங்கள் மாமாவைப்போல் ஒரு தெய்வப் பிறவியை நாங்கள் காணமுடியாது. மாமாவின்ஆத்மா அழியாது. அது அப்படியே அடுத்த பிறப்பில் எங்களோடு கலந்து விட வேண்டும். இதுவே எங்கள் பிரார்த்தனை.

எங்கள் பிரார்த்தனைகள் சிந்திக்கச் சித்தி விநாயகனை வேண்டித் தவமிருப்போம்.

மாமாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மருமக்கள்
த.தர்மகுமார், நா.ஞானசேகரம்
ர.பத்மநீலா, வி. முரளிதரன்,
த. திவ்யகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "BELOVED MAMA"

*I wanted to write a poem about "Mama"*
*but, don't know where to start*
*I will start saying in two words*
*what an "Unfortunate Loss" we all have*
*He never treated me as a son-in-law, for that*
*I was treated more than a son, anyways.*
*A dearest man he was to all, that*
*I mention to my friends & colleagues all the time*
*what a hospitality, he showed towards us,*
*Any time became lunch time for us*
*"Ambika get the meals ready"*
*we were treated as we walked in*

*He liked his daughter so much that he*
*always prepared "spicy sambol" for her*
*what a taste and they both had for chillies*
*I envied for their appetite*
*Sugi often queries "Thiyagar how are you?"*
*what a big smile, he responds with*
*He waited long for our family affair that*
*We only gave news of our first, at August*
*"Oh God", our baby will be lucky with*
*All grandparents, we dreamed!*
*It became only a dream at last,*
*"our Lord" had other ideas for all of us.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*He wrated a vacuum so large, that*
*No one can fill the size of it anyways*
*He enjoyed a lot of things in life that*
*don't know what to list here any more*
*What an interest in vegetable gardening? or*
*What a passion for baseball & cowboy movies?*
*What an interest in boxing with Nishanth? or*
*What a interest in petting the grand daughters?*
*What a dream all on lives have been that,*
*He is still there, where you wake up from your dreams!*
*I pray that his soul rests in peace, so*
*his memories will longer on forever with us.*

Son - in -Law
Muralitharan .V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Grandfather

My grandfather was always helpful, whenever my mom needs help he tries to get a ride on one of my uncle's car or if he doesn't he comes on a bus. Anyday anytime anywhere when my grandfather see us he has something to give to us like chocolate or anything. My grandfather cares about us more than his money. Our grandfather was 62 years old, but he really looks like he's younger. This summer my family and me went to 1000 Island, Sand Bank Beach, Wonder Land and to the Sky Dome. Our grandfather came to those places with us. My grandfather is a tall and active man. He always clean and well dressed person. When I was in grade 1 my grandfather used to take us to school and brings us back home when school finished and that's the part that I could not forget. If my grandfather meets someone even little kids like me, he's very nice to them with a happy feeling. I don't think any grandfathers could be like him. Our grandfather went to Sri Lanka and he bought us some beautiful dresses and gold earings. I missed him greatly. He will always remain with me.

Eldest Grand daughter,
Eshana (Esha) .T

# MY GRANDFATHER

In Tamil we call our grandfather Thatha. He died on October 25th 1997 and he was born in 1935. Our grandfather is someone who never forgets about us and he always be clean and never been messy. Our grandfather and Grand Mother is came to Canada in 1994. Our grand father is 62 years old. He looks like he's only 50 years old but he isn't.

We went to lot of journeys with him. When we went to Safari with him. He took me on horse ride and had more fun with us than our parents and the same thing to us. Every day when we went to our grandfather's house he gives us chocolates and gum. When he went to Sri Lanka he bought us gold earings and dresses.

From
Anushana (Asha).T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I LOVE MY GRANDPA (THATHA) FOREVER

Thatha was a great man in the world. He buys chocolates and candies for my sister Priyanka and me. He comes to our house everyday. He takes Priyanka and me to school, swimming classes and parks. He takes me to baseball practise. He plays with us. He teaches Tamil and Math. He teaches 'Karate" too. He always very nice, and smiling face. I missed my Thatha so much and he always in my heart.

Loving Grandson
Nisanth Gnanasekaram

# MY GRANDFATHER (Raja)

I love my Thatha. He tought me how to write my name, 1,2,3,.....and a,b,c,d........... I like to play with my Thatha. Each time he visited my house he brought chocolates. Sometimes my Thatha help me to wash my face and take a shower. I love my Thatha so much.

Grand daughter
Tharsha .T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களைப்பா

# அக்காவின் மனக்குமுறல்

அக்கா அக்கா என்று அன்போடு அழைத்தவனே
எக்காலம் காண்பேனுனை இப்பிறப்பில் - மீளாத
துக்கத்தில் துவழ்கின்றேன் தூயவனே நீயெந்தன்
பக்கத்தில் இருக்கின்றாய் என்றிறுமாந்து இருந்தேன்
திக்கற்று நிற்கின்றேன் திரும்பிவர மாட்டாயா?
இத்தரை மீது வாழ்ந்த பத்தரை மாற்றுத் தங்கம்
சித்திரை நிலவைப் போல புன்னகை வீசும் சிங்கம்
நித்திரை கொண்டதென்ன நிமலனை வேண்டுகின்றேன்
உன் ஆத்மா சாந்திபெற

திருமதி புஸ்பராணி சிற்றம்பலம்
குடும்பத்தினர்

# பாசமிகு அண்ணாவே!

பாசமாய் எங்களுடன் பற்றுவைத்து பழகிவந்த அண்ணாவே
வாசமலர் வாடியது போலுங்கள் வாழ்க்கை
போனதண்ணா
நேசமுடன் நித்தம் எங்கள் நெஞ்சினிலே நிறைந்தவரே
வீசும் காற்றாகி விட்ட உம்பிரிவு கேட்டு விம்முகின்றோம்
சிரித்த முகத்துடனே சபைதனிலே நீர் நின்று செய்யும்
சிறப்பான சேவைகண்டு உவகை கொண்டு
மகிழ்ந்திருந்தோம்
குறித்த நேரமதில் குடும்பமாய்க் கூடிவந்து சபைசிறக்க
முன்னின்று கருமமாற்றும் தளராத, மனம்படைத்த
பண்பாளன்
தறித்த மரம் வீழ்ந்ததுபோல் சாய்ந்துவிட்டீர் தவிக்கின்றோம்
பறித்துவிட்டான் பாவியவன் பணிகின்றோம் பரமனடி
ஆத்மா சாந்திபெற

உம்பிரிவால் துயருறும்
ஏகாம்பரநாதன் குடும்பத்தினர்
குருநாதன் சறோஜினி குடும்பத்தினர்
திருமதி சகுந்தலா நடராஜா குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மக்கள் மனம்

தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளோடு பிறர் பெற்று வளர்த்த பிள்ளைகளையும் தமது பிள்ளைகளே போல் நினைப்பவர்களை மனிதர்களில் மகான்கள் என்போம். இது இலகுவானதோர் இயல்பு அல்ல. பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற தத்துவத்தின் தாற்பரியம் சிலருக்குப் புரிவதில்லை. இது சுயநலத்தின் ஒரு சூட்சுமம் என்பதுவும் பலருக்கு விளங்குவதில்லை. பெற்றால் தான் பிள்ளையா? பேணி வளர்க்கப்படுபவர்களும் பிள்ளைகள் தானே என்ற வழிவழி வந்த பந்தபாச ரகசியத்தை பயின்ற பெரியாரே எங்கள் தியாகர் ஐயா.

மகனே! என்ற கனிந்த குரலும். மகளே! என்ற கசிந்த ஓசையும் தியாகர் வாயின் வயிலின் இசை என்றே கூறலாம். எப்படி இருக்கிறீர்கள்? இப்படி நடந்து கொள்ளுங்கள். எப்படியும் வாழலாம் என்று எண்ணா தீர்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்றுதீர்மானித்து முயற்சி எடுங்கள். முயற்சி திருவினையாகும். என்றெல்லாம் போதனை செய்வார். நாம் நல்லாயிருக்க வேண்டுமானால் எல்லோரும்நல்லாயிருக்க வேண்டும் என்று தத்துவக் கருத்தோடு கதைப்பார்.

தனது உழைப்பு, உறவு மறவாமை, உள்ளன்பு முதலியவற்றினால் ஊரில் பெரிய மனிதனாய் மதிக்கப்படடவர் எங்கள் தியாகர் ஐயா! காலமெல்லாம் கண்ணியம்காத்த பெருந்தகை. பிறரை நோகச் செய்யாத பெருந்தன்மை மிக்கவர். நல்லவர்கள் நீண்டநாட்கள் வாழக் கூடாது என்பது காலனின் கருத்தோ தெரியோம். காலன் அவரைக் கவர்ந்தாலும் காலம் அவரை மறக்காது. நாங்களும் அவரை மறக்க மாட்டோம். நினையாது ஒருபோதும் இருக்க மாட்டோம்.

அவர் ஆன்மா சிவப்பேறு பெறும்.

பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

எங்கள் சம்பந்தி அமரர் சின்னத்தம்பி தியாகராஜா அவர்களை எங்கட்கு 1994ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் நன்கு தெரியும். அவர் பழகுவதற்கு மிகவும் இனியவர். வீட்டில் குடும்பத்தாருடனும் மற்றும் உறவினர், சிநேகிதருடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும், பழகுவார். இப்படி ஒரு நல்ல உள்ளம் படைத்தவரை காலன் இவ்வளவு சீக்கிரத்தில் எம்மிடமிருந்து பிரிப்பான் என்பதை நாம் கனவில்கூட கண்டிருக்க முடியாது. எல்லாம் விதியெனும் காலம் செய்த கோலம் தான். 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டோர் வருவதில்லை இம்மாநிலத்தே" ஆதலினால், நாமே எம்மை தேற்றிக் கொள்வது நன்று.

எங்கள் குடும்பத்தோர் அனைவரின் ஆழ்ந்த அனுதாபத்தை அமரர் சின்னத்தம்பி தியாகராஜா அவர்களின் பிரிவால் துயர்உறும் அவரின் குடும்பத்தோர் அனைவருக்கும் (மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்) தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

வணக்கம்

இங்ஙனம்
திரு.திருமதி. விஸ்வலிங்கம்
மக்கள், பிள்ளைகள் மருமக்கள்

C. Visvalingam
235 Markham Road # 1116
Scarborough On. M1J 3C6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தி க. பத்மநாதன் அவர்களின் இரங்கலுரை..........

சம்பந்தி என்ற முறையில் எனக்கு அறிமுகமானவர் அமரர் தியாகராஜா அவர்கள். நாம் பழகிய காலம் குறுகியதாக இருந்தாலும் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டதில் நல்ல நண்பர்களானோம்.

அவரது மரணம் எங்களுக்கு அதிர்ச்சியையும், மன வேதனையையும் கொடுத்தது. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று.

கடந்த வருடம் இவர் கொழும்பில் வந்து நின்ற காலப்பொழுதிலேயே இவருடன் பழகும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இவர் மனைவி, மக்கள், பேரப் பிள்ளைகள் பால் எவ்வளவு அன்பு கொண்டவர் என்பதை அக்காலப் பகுதியில் அறிந்து கொண்டேன். பெருமையும் கொண்டேன்.

அமரர் தியாகராசா அவர்கள் எல்லோருடனும் இன்முகத்துடன் இனிதாக பழகும் இயல்புடையவர். கலகலப்பானவர். சுறுசுறுப்பு நிறைந்தவர். மனதில் மிகுந்த பாசத்தைக் கொண்டவர். தெய்வ பக்தியும், கற்றோர், பெரியோர் ஆகியோரை மதித்து அன்பாகப் பழகும் தன்மையும் நிறைந்தவர்.

உலகில் வாழும் மக்கள் யாவர்க்கும் பாரபட்சமின்றி இறைவனால் ஒருநாள் வழங்கப்படும் பதவியை அவர் அடைந்துவிட்டார்.

இவ்வுலகை விட்டு நீங்கி எங்களை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி இறையடி சேர்ந்துவிட்டார்.

''நண்பா உமக்கு இறப்பில்லை எம் நினைவுகள் இறக்கும்வரை."

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நானும் எமது குடும்பமும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

திரு.க. பத்மநாதன் குடும்பம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கண்ட கண்ணியவான்

ஒரு மனிதனுக்கு கண் தான் அவன் எண்ணங்களை காட்டக்கூடிய கண்ணாடி என்பார்கள். கரம்பொன் 'ராஜா" வின் கண்கள் அவரை எங்களுக்குக் காட்டியது. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும் என்பான் பாரதி. தியாகராஜாவின் உள்ளத்து உணர்வுகளையும் உண்மைகளையும் அவருடைய வாக்கிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். எங்கள் ஊர்சபைகளில் முதல் மரியாதை கொடுக்கப்படும் குடும்பங்களில் ராஜா குடும்பமும் ஒன்று

ஒரு சபையின் சீர்சிறப்புக்கும் கலகலப்புக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் சபையில் உட்கார்ந்திருக்கும் சபாநாயகர்களின் அகவீச்சும், புறவீச்சுமே காரணமாய் அமையும். ராஜா இருக்கும் இடத்தில் இந்த வீச்சின் விளப்பத்தை அறிந்தோம்; வெள்ளைவேட்டி மடிப்புக்குலையாத சேர்ட், வாரி இழுக்கப்பட்ட தலை, புன்முறுவல் பூத்த முகம் இந்தியாதி தோற்றத்துடன் அவர் காணப்படுவார்.

தியாகராஜாவின் மறைவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல உற்றார் உறவினர் ஊர்மக்கள் ஆகிய எங்களுக்கும் ஒரு கைவிழுந்த கதைபோல் ஆகிவிட்டது. என்செய்வோம். விதி செய்த வினைக்கு வருந்துவதைத் தவிர வேறுவழி என்ன?

அவர் மறைவால் துன்பமடையும் அவருடைய மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு ஆண்டவன் ஆறுதலைக் கொடுத்து அருள வேண்டுகின்றோம். எங்கள் அனுதாபம் என்றும் உரியது.

ராஜாவின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உற்றார் உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜா!
## அங்கு நாங்களும் ஒரு நாள் வருவோம்

எல்லோர்க்கும் இனியவனே நண்பன் ராஜா!
ஏங்கித் தவிக்கின்றோம் உன் இனிய குரல்கேளாது
அன்பு மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார்
அன்பாய் தவிக்க விட்டுச் சென்றாயோ
உன் இனிய நண்பர்கள் கண்களெல்லாம்
துன்ப வெள்ளக் கண்ணீர் வழிந்தோட
என்ன பயணமிது எனவே கதறியழ
எங்கு சென்றாய் ராஜா! எங்கள் நண்பா?
அங்கு நாங்களும் ஒரு நாள் வருவோம்
இது நியதியெனத் தேற்றியே எம் மனதை
அது வரை ஆத்மா சாந்தி இறையடியில்
நிலை பெற துதிப்போம் என்றும்

குளியாபிட்டி நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஐந்து தோத்திர அடுக்கு

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவறென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆனானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும்
நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில்
விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பர்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாராயணம்

## தேவாரம்
### 1ம், 2ம், 3ம், திருமுறைகள்
திருஞானசம்பந்தர்

தோடுடைய செவியன்விடை யேறியோர்தூ வெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே

எந்தையீச னெம்பெருமா னேறமர்கடவு ளென்றேத்திச்
சிந்தைசெய் பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதென்றால்
கந்தமாமல ருந்திக்கடும்புன னிவா மல்கு கரைமேல்
அந்தணசோலை நெல்வாயில் அரத்துறையடி கடம்மருளே

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
    வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
    பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாய கன்நால்
    வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னோடு மமர்ந்த
    ஆலவா யாவது மிதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரை கெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே

## 4ம், 5ம், 6ம், திருமுறைகள்

திருநாவுக்கரச நாயனார்.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இதுவொப்பது கண்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்து என்னை நலிவதனை
நணுகாமற் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே

சலம்பூவொடு தூபம் மறந்து அறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டு ழல்வாய்
உடலுள்ளுறு சூலைதவிர்த் தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகை கெடில
வீரட்டானத்துறை அம்மானே

### திருத்தாண்டகம்

முற்றாத பால்மதியஞ் சூடினானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமாந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்ற புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏயவன்காண் எல்லார்க்கும் இயல்பானான் காண்
இன்பன்காண் துன்பங்கள் இல்லாதான் காண்
தாயவன்காண் உலகுக்கோர் தன்னொப்பில்லா
தத்துவன்காண் உத்தமன் காண்தானே எங்கும்
ஆயவன்காண் அண்டத்துக்கு அப்பாலான் காண்
அகங்குழைந்து மெய்வருந்தி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண் அவனென் மனத்துளானே

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன்ஞாலத் தகத்துட்தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவாளோடும்
பொருந்தணை மேல்வரும்பயனைப் போகம் மாற்றி
பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்ற புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

தினைத்துணையோர் பொறையிலா உயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்
ஆங்காரந் தவிர் நெஞ்சே அமரர்க்காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகிய வெஞ்சிலை வளைத்துச் செந்தீமூழ்க
நினைத்தபெருங் கருணையன் நெய்த் தானமென்று
நினையமா நினைத்தக் கால் உய்யலாமே

## 7ந் திருமுறை தேவாரம்

சுந்தரமூர்த்தி நாயனார்

பித்தா பிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேன் எனலாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின்மலைபோல
வருவார் விடைமேல் மரிதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால்பிரமன் இந்திரற்குந் தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துட் பெரியபெருமா னடிகளே

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெலாந்தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனித்தணி
ஆரூரானை மறக்கலு மாமே

## 8ந் திருமுறை திருவாசகம்
### மாணிக்கவாசக சுவாமிகள்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே

வான நாடரும் அறியொணாதநீ
மறையி லீறுமுன் தொடரொணாதநீ
ஏனை நாடருந் தெரியொணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம்ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித் தவா
நைய வையகத் துடைய விச்சையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப் பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யில்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறிய கிற்பாரே

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9ந் திருமுறை திருவிசைப்பா

என்னை உன்பாத பங்கயம் பணிவித்து
 என்பெலா முருக நீஎளி வந்து
உன்னை என்பால் வைத்து எங்கு மெஞ்ஞான்றும்
 ஒளிவற நிறைந்த ஒண் சுடரே
முன்னை என்பாவம் முழுவதும் அகல
 முகத்தலை அகத் தமர்த் தெனக்கே
கன்னலுந் பாலுந் தேனுமா ரமுதுங்
 கனியு மாயினியை யாயினையே

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
 உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
 சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
 அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே

ஏகநாயகனை இமையவர்க்கரசை
 என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
 பொன்னெடுஞ் சிவிகை யாவூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
 மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
 உண்டென உணர்கிலேன் யானே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
 வண்டத் தோடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
 கோவிலும் போனகமு மருளிச்
சோதிமணி முடித் தாமமும் நாமமுந்
 தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே
 பல் லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல் லாண்டு கூறுதுமே

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள வில்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

## 10ந்திருமுறை திருமந்திரம்
### திருமூலநாயனார்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தி யில்வைத்தடி போற்று கின்றேனே

சிவனொ டொக்குந் தெய்வந் தேடினுமில்லை
யவனொ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே

உள்ளத் தொருவனை யுள்ளூறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா வோருவனை
உள்ளமுந் தானுமு டனேயிருக்கினும்
உள்ளம் அவனை யுரு வறியாதே

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெல்லாங் கூடி யொலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே

## 11ந் திருமுறை அற்புத திருவந்தாதி

காரைக்கால் அம்மையார்

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான்தானே - அறிகின்ற
மெய்ப் பொருளுந்தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும் - சுடர் உருவில்
என்றொக்கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவாக்கு

## திருமுருகாற்றுப்படை

நக்கீரர்

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்ச மரிலஞ்சலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இரு காலுந் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னையொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பாசெந்தி வாழ்வே

## கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி

நக்கீரர்

சொல்லும் பொருளுமே துத்தூரியும் நெய்யமா
நல்லிமஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியக்கயிலை மேல் இருந்த
பெண் பாகர்க் கேற்றி னேன் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ந் திருமுறை
## திருத்தொண்டர் புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆநந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியிள் மலர்ந்தார்

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந்து
எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிக்கக் கண்டார்கள்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பரவியோம மாகும் திருச் சிற்றம்பல த்துள்நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்கவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி!
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கம் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே தேனா ரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே!
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே!
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாதத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளகப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி யென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப் பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இமையோர்
திருப் பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டு கொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொழு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விறலியும் நீயுநின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உலகுக் குயிரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிச்செய்த

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தென்ன வெண்ணகையாய்முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணொக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலப்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்!

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவுபாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்!

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீர் ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோ ரெம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எம்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்குழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

திருச்சிற்றம் பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
  முளைக்குடந் தூபம் நல்தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
  நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
  கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
  ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
  பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
  வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூடவுமின் தொண்டர் புறம்நி லாமே
  குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மை யாளச்
  செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
  தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
  எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பெருமான்
  ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
  கேய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
  காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
  நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
  திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
  பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திரு வேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

உலக்கை பலவோச்சு வார் பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே

வாழ்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய ஆட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடி
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம் மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினாருக்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனார் துதி

பூரணைக் கிறைவா! போற்றி!
புட்கலை கணவா! போற்றி!
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி!
ஆரணச் சுருதி எல்லாம்
அடல் உருத்திர அண்ணலென்று
காரணம் கருதி ஏத்தும்
கடவுளே! போற்றி! போற்றி!

அரியரன் புதல்வா! போற்றி!
ஐங்கரன் துணைவா! போற்றி!
சபரியா மலையில் வந்தே
தண்ணருள் பொழிவாய் போற்றி!
உரிமைக்காய் அனலைதீவில் உறைந்து
எமக்கு அருள்வாய் போற்றி!
திரிபுரம் எரித்த எங்கள்
சிவன் திருமகனே போற்றி

வெள்ளை வாரணத்து அமர்ந்து
வினையெலாம் களைவாய் போற்றி!
கள்ளத்தை மனத்து அகற்றி
கருணையைப் பொழிவாய் போற்றி!
உள்ளத்துள் உண்மை என்ற
ஒளியினைத் தருவாய் போற்றி!
பள்ளத்தில் வீழ்ந்திடா துன்னன்புப்
பாதத்திற் சேர்ப்பாய் போற்றி!

அரகர குமாரா அடியனேனழைக்க
வருவாயுன்றன் மனமுவந் தென்முன்
மாயவன் சிவன் மகன் வருக வருக
நேயமாய்ப் பூரணை நினைவோன் வருக
புட்கலை மணாளா போற்றி வருக
முக்கண்ணன் தந்த மூர்த்தியே வருக
செக்கர் வானிறைச் சடைச் செம்மலே வருக
செண்டாயுதனே சீக்கிரம் வருக
வண்டார் துளமணி மகனே வருக
அண்டர்கள் போற்றும் ஐயா வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தலைவனாய், வாழ்வின் வழிகாட்டியாய் விளங்கிய அமரர் சின்னத்தம்பி தியாகராஜா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசி, தொலைநகல், தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம், மலர்ச்செண்டு வைத்தோர்க்கும், அனுதாபப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தோருக்கும், பரமன் புகழ் பாடியோருக்கும், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியங்களில் கலந்து கொண்டோருக்கும், இந்த நினைவு மலரைத் தொகுத்து உதவிய புலவர் ஈழத்து சிவானந்தன் அவர்களுக்கும், அச்சிட்டுத் தந்த ஸ்காபுரோ அச்சகத்தினரிற்கும், மற்றும் எமது துயரத்தில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று" --- குறள்

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலமுறை கிளத்தல்

சின்னத்தம்பி + விசாலாட்சி

↓

புஸ்பமணி சிற்றம்பலம்
**தியாகராசா**
ஏகாம்பரநாதன் இரத்தினேஸ்வரி
சரோஜினிதேவி குருநாதன்
சகுந்தலா நடராசா

பொன்னையா + சிவயோகம்

↓

சாரதாம்பாள் சுப்பையா
**அம்பிகாவதி**
கமலாம்பிகை ஆனந்தசிவம்
கணேஷன் மகாலட்சுமி

**தியாகராசா** — **அம்பிகாவதி**

↓

- சாந்தி + தர்மகுமார்
  - ↓ ஈஷானா, அனுஷ்ஷானா, தர்ஷானா
- குமுதினி + ஞானசேகரம்
  - ↓ நிஷாந், பிரியங்கா
- ரவிதரன் + பத்மநீலா
- சுகிர்தினி + முரளிதரன்
- உமாதினி + திவ்வியகுமார்
- குகாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org